(b) whether any such driving school will be started by the traffic police in Madras City in this year?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) இல்லை. எனினும் மாநகரங்கள், நகரங்கள் அனைத்திலும் வலவர் பயிற்சிப் பள்ளிகள் நிறுவ வேண்டும் என்ற சென்னை மாநகரக் காவல் துறை ஆணையாளரின் கருத்து ஒன்று அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. டி. மார்டின் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த டிரைவிங் ஸ்கூல் ஆரம்பிப்பதன் வழியாக, சென்னையிலே இப்பொழுது பஸ் போக்குவரத்தில் ஏற்படக்கூடிய பெரிய பெரிய விபத்துக்களைத் தடுக்கக்கூடிய அளவில், உடனே போலீஸ் தரப்பில் ஒரு டிரைவிங் ஸ்கூல் ஆரம்பித்து, ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ்களில் உள்ள டிரைவர்கள் அத்தனை பேர்களுக்கும் பீரியாடிகலாக ஒரு சில நாட்களுக்காவது அந்த டிரைவிங் ஸ்கூலில் பயிற்சி அளித்து, நடைபாதை விபத்துக்களைத் தடுப்பதற்கு அவசியமான நடவடிக்கையை இந்த அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : டிரைவிங் ஸ்கூல் ஆரம்பிக்க வேண்டும் என்ற பிரச்னை 1965-ம் ஆண்டில் பரிசீலிக்கப்பட்டிருக்கிறது. அப்பொழுதிருந்த தொழில் அமைச்சர் அதைப்பற்றிப் பரிசீலித்து, சென்னை, கோவை, திருச்சி ஆகிய இடங்களில் அமைக்கலாம் என்ற கருத்தை அவர் ஏற்றுக்கொள்ளாமல், திருச்சி, கோவையில் ஆரம்பிக்கலாம் என்று ஏற்பாடு செய்யப்பட்டது. இப்பொழுது கிடைத்திருக்கிற விபரங்களின்படி, கோவையில் நடைபெற்ற டிரைவிங் பள்ளியில், 1968 டிசம்பர் 1969 ஜூன் ஆகிய இரண்டு ஆண்டுகளில் ஒருவரும் டிரைவிங் ஸ்கூலுக்கு வராத நிலைதான் இருந்திருக்கிறது. பல தனியார், டிரைவிங் ஸ்கூல்கள் நடைபெற்று வருகின்றன. அவற்றை அரசாங்கம் அனுமதிக்கலாமா என்று இப்பொழுது ஆலோசித்துக்கொண்டிருக்கிறது.

திரு. டி. மார்டின் : பேரவைத் தலைவர் அவர்களே, கோவையில் நடைபெற்ற டிரைவிங் ஸ்கூல்பற்றி எந்தவிதமான அறிவிப்பும் அதிகமாக இல்லை என்ற காரணத்தினால் அங்கே டிரைவர்கள் வராமல் இருந்திருக்கலாம். ஆனால், சென்னையைப் பொறுத்தமட்டில், சென்னையில் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ்களில் ஏற்படுகின்ற விபத்துக்களை நீக்குவதற்கு, சிறிய அளவிலாவது போலீஸ் தரப்பில் ஒரு டிரைவிங் ஸ்கூல் ஏற்பாடு செய்து, ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் டிரைவர்ஸ் அத்தனை பேர்களுக்கும் அங்கு பயிற்சி அளிக்க அரசு முற்படுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கனவே பயிற்சி பெற்றவர்கள், ஹெவி டிரைவிங் லைசென்ஸ் உள்ளவர்கள் நூற்றுக்கணக்கான பேர்கள் வேலையின்றி இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லை.

Bus fares in Kanyakumari district

*329 *Q.*—THIRU J. JAMES : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether this Government has increased the bus fare after the routes were nationalised in Kanyakumari district; and

(*b*) if so, how much?

1970 செப்டம்பர் 9]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) 1968-ம் ஆண்டு ஏப்ரல் திங்களில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத்துறைப் பணிகளில் கட்டணங்களை மாற்றியமைக்கும்பொழுது நாகர்கோயிலில் இருந்து 10 மைல் சுற்றளவுக்கு அப்பால் கிலோமீட்டர் ஒன்றுக்கு 2 காசிலிருந்து 2.5 காசாக இத்துறையின் கன்னியாகுமரிப் பிரிவிலும் கட்டண விதங்களை அரசு மாற்றியமைத்தது. நாகர்கோயிலின் 10 மைல் சுற்றளவுக்கும் சென்னை மாநகரக் கட்டண விதங்கள் பொருந்துமாறு செய்யப்பட்டுள்ளன.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு இரண்டு தடவை கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. மேலும், மூன்றாவது தடவை கட்டணத்தை உயர்த்துவதற்கு அரசாங்கத்தில் ஒரு குறிப்பு இருப்பதாகத் தெரிகிறது. அதைப் பொது மக்கள் வெறுக்கின்ற காரணத்தினால், இப்பொழுது இருக்கிற அந்த எண்ணத்தைக் கைவிட அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதைப்பற்றிய தகவல் இப்பொழுது தருவதற்கில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இந்த ஃபேர் எல்லாம் கூட்டுவது சம்பந்தமாக பலவிதமான கஷ்டங்கள் இருக்கின்றன. குறிப்பாக, மலைப் பகுதிகளிலே ஓடுகிற பஸ்களிலே ஒரு கட்டணம், கடலோரப் பகுதிகளிலே ஓடுகிற பஸ்களிலே இன்னொரு கட்டணம் என்று வித்தியாசம் இருக்கிறது. இதை ஒருமைப்படுத்துவதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கட்டண விகிதத்தை மாற்றுகின்ற ஆலோசனை இப்பொழுதில்லை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் கருத்தைப் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுப்பதற்கு ஆட்சேபணை இல்லை.

திருமானூருக்கு அருகில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே பாலம்

* 330 வினா—**திரு. ஆர். கருப்பையா:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், திருமானூர் அருகே கொள்ளிடம் ஆற்றுக்குக் குறுக்கே பாலம் கட்டும் வேலை எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இப்பணிக்கான ஒப்பந்தம் முடிவு செய்யப்பட்டு 20—10—1969 அன்று பணி தொடங்கியது. திருமானூர் பக்கத்தில் நீர்ப்பாய்ச்சல் இருந்ததால், விளாங்குடி பக்கத்திலிருந்து பணி துவக்கப்பட்டது. 22 பாலத் தூண்களுக்கான 22 கிணறுகளில், எல்லா பாலத் தூண்களுக்கான விளிம்புக் கட்டைகள் அமைக்கப்பட்டு, 115 அடி ஆழத்திற்கு காரை பூசப்பட்டுள்ளது. இப் பணி விரைந்து நிறைவேறி வருகின்றது.

திரு. ஆர். கருப்பையா: தலைவர் அவர்களே, இந்தத் திருமானூர், விளாங்குடிப் பக்கத்தில் அமைக்கக்கூடிய பாலமானது திருச்சி, தஞ்சை மாவட்டங்களை இணைக்கின்ற பாலமாக இருப்பதினால், போக்குவரத்திற்கு